தொழில் விருத்தியடையக்கூடிய முறையிலே பாக்கெட்டுகள் இருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து இந்தத் தொழிலுக்கு ஒரு கேந்திரமான இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேரளத்தைப்போல் தமிழகத்திலேயும் தரப்படுகிறது. இதுபற்றிப் பல விஷயங்கள் இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல் தஞ்சாவூர் மாவட்டத்திலே 20 தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கு பிரம்மாண்டமான திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து வேறு எந்த எந்தப் பகுதிகளிலே அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவோ, அந்த அந்தப் பகுதிகளிலே பரிசீலனை செய்யப்பட்டு சிறிய சிறிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

Thiru K. M. SUBRAMANIAM : Is there any proposal to mechanise the coir industry in Tamil Nadu, as it had been done in Kerala ? Does the Government think that if it is mechanised it will create unemployment problem ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நான் சொன்ன உதவிகளே சிறிய அளவில் இயந்திர சாதனங்களுடன் தொடங்கப்படுகிறது. பெரிய அளவில் மெகனைஸ்டு ஸ்கீம் எடுத்தால் வேலைவாய்ப்புக் குறையலாம். ஒரு லட்சம் ரூபாய்த் திட்டம், கட்டிட வசதி, இயந்திர வசதி கொடுத்து, இந்த பைபரை எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த பைபர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குக்கூட வாய்ப்பு இருப்பதனால் நாம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் தந்து வருகிறோம்.

திருப்பூருக்கு துணை நீதிமன்றம்.

*** 362** வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயதுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருப்பூரில் சப்-கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

புதுக்கோட்டையில் மாவட்ட நீதிமன்றம்.

*** 363** வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி கோர்ட்டு ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாவட்ட செஷன்ஸ் நீதி மன்றம் 14—1—1974 முதல் செயல்பட சனவரி 1974-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1974 மார்ச் 11]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அலுவலகம் எங்கே செயல் பட இருக்கிறது. புதிய கட்டிடம் கட்டப் போகிறதா ? எற்கனவே இருக் கிற கட்டிடத்தில் நீடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது புதிய கட்டிடத்தைப் பற்றி திட்டம் எதுவும் இல்லை.

சென்னையிலுள்ள நினைவுச் சின்னங்கள்.

* 364 வினு—திரு. ரா. ரா. (முனுசாமி : திருமதி த. ந. அனந்தநாயகி) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர பொதுச்சாலைகளில் எத்தனை நினைவுச் சின்னங்கள் எங்கெங்கே உள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவரப்பட்டியல் @ சட்டப் பேரவையின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேலு : நம்மை அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர் கள் சிலைகளை அகற்றிவிட்டு, சுதந்தர வீரர்கள் சிலைகளை அங்கங்கே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : படிப்படியாக அந்த வேலை நடைபெற்று வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : ஆங்கிலேயர்கள் என்றாலும் கூட—ஜி.யூ. போப், அன்னிபெசன்ட் போன்றவர்கள் நம்முடைய சமுதாயத்திற்கு வாழ் வளித்தவர்கள். அவர்களின் சிலைகள் நீங்கலாக, மன்ரோ சிலை, எழாம் எட்வர்ட் சிலை போன்றவற்றை எல்லாம் அகற்றி அங்கே நம்முடைய சமுதாயத்திற்கு வாழ்வளித்தவர்கள் சிலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை.

திரு. அ. பெ. சீனிவாசன் : சென்னை நகரத்தில்—பொதுவாக தமிழ் நாட்டிலே—சிலைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஆகவே இந்தச் சிலைகளுக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. தர்மலிங்கம் : இல்லை.

@ 110—115-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.